# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | EA.101/2018 in EP.145/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 04 ( PW- 04 ) |
| பெயர் | :- | சதீஸ்குமார் |
| தேதி | :- | 14-10-2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

தாத்தா பெயர் ராமசாமி பிள்ளை. அவருக்கு முருகேசன், ராஜேந்திரன், ஜெயபிரகாஷ் என்கிற 03 மகன்களும் கஸ்தூரி என்ற மகளும் பிள்ளைகள் என்றால் சரிதான். நான் 1981-ஆம் ஆண்டு பிறந்தேன். 1982-ஆம் ஆண்டு எனக்கு ஒரு வயது என்றால் சரிதான். ராமசாமிபிள்ளை வகையறாவினர் 1982-ஆம் ஆண்டு பாகப்பத்திரம் எழுதிக்கொண்டனர் என்றால் சரிதான். எனக்கு அப்போது ஒரு வயது என்பதால் பாகப்பிரிவினை குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனார் ராஜேந்திரன் சொல்லி தெரியும். என் தகப்பனார் ராஜேந்திரன் இறந்து மூன்று ஆண்டுகள் இருக்கும்.

பாகப்பிரிவினை பத்திரத்தை நான் படித்துப் பார்த்து இருக்கிறேன். அதில் ஜங்கம சொத்துக்களை ஏற்கனவே பிரித்துக்கொண்டுள்ளோம் என்ற வாசகம் இருப்பது தெரியும். ஜங்கம சொத்துக்களின் விவரங்களோ அளவோ அதில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாருக்கும் ஜெயபிராகஷிக்கும் என்ன கொடுத்தார்கள் எவ்வளவு

கொடுத்தார்கள் என்றால் தொழில் ஆரம்பித்துக் கொடுத்தார்கள். பணமாக, பொருளாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு வாகனங்கள் சம்மந்தமான பட்டறை வைத்துக் கொடுத்தார்கள். சரவணா Engineering Works என்ற பெயரில் பட்டறை வைக்கப்பட்டது. அது ராஜேந்திரனுக்கு தனிப்பட்ட முறையில் சொந்தமானது. அதை விற்பனை வரி அலுவலகத்தில் பதிவுசெய்யவில்லை. அது எந்த ஆண்டு ஆரம்பிக்கப் -பட்டது என்று எனக்குத் தெரியாது.

முருகேசனுக்கு 20,000/-உரூபாய் பணமும் 9 சவரண் நகைகளும் பாத்திரங்களும் பாகப்பிரிவினையில் கொடுக்கப்பட்டது என்று வாதிகள் சொல்லிக் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஈஸ்வரியின் 400 சதுர அடி நிலத்தை வாங்குவதற்கு என் தகப்பனார் ராஜேந்திரன் 8,500/- உரூபாய் விலை பேசி 5,000/- உரூபாய் முன்பணம் கொடுத்தார். அது எப்போது என்று குறிப்பாக எனக்குத் தெரியாது. அந்த விவரத்தை என் தகப்பனார்தான் சொன்னார். இந்த விவரத்தை முதல் -விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் மேற்சொன்ன சங்கதியை தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முருகேசன் ஈஸ்வரி -யிடமிருந்து நேரடியாக சொத்தை வாங்கிகொண்டார். 8,500/- உரூபாய்க்கு வாங்கினார்.

என் தாத்தா ராமசாமி மாட்டுவண்டி பட்டறை வைத்து மாட்டுவண்டி ஓட்டியும் தொழில் செய்தார். முருகேசன் மாட்டுவண்டி பட்டறை வைத்துள்ளார் என்றால் சரிதான். முருகேசன் 1990-ஆம் ஆண்டு ஜெயராணி பள்ளிக்கு பின்புறம் வாங்கியதாக நான் சொல்லியுள்ள இடத்தை யாரிடமிருந்து வாங்கினார் என்று முதல்விசாரணையில் சொல்லவில்லை

என்றால் சரிதான். சின்னையா பிள்ளை என்பவர் பெரிய தாத்தா. அவருடைய சொத்தை விற்க முருகேசன் பகர அதிகாரப் பத்திரம் வாங்கினார் என்றால் சரிதான். அது 1982-ஆம் ஆண்டுக்கு பிறகு பெறப் -பட்டது. பகர அதிகாரப் பத்திரத்தை பயன்படுத்தி பெரியசாமி என்பவருக்கு ஒரு பகுதியையும் தன்னுடைய மனைவி சாந்திக்கு ஒரு பகுதியையும் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். சாந்தி பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்திரத்தை நான் பார்க்கவில்லை. குடும்பத்திற்காக சாந்தி பெயரில் கிரையம் எழுதினார் என்று எவ்வித முகாந்திரமும் இல்லாமல் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சொத்தை வாங்க சாந்திக்கு தனிப்பட்ட வருவாயும் வசதியும் இருந்தது என்று சொன்னால் சரியல்ல.

முருகேசனும் வாதிகள் செந்தில் வகையறாவினரும் எந்த வங்கியில் எப்போது எவ்வளவு கடன் வாங்கினார்கள் என்றால் கூட்டுறவு வங்கியில் 1995-ஆம் ஆண்டு ஓர் இலட்சம் உரூபாய் வாங்கினார்கள். நான் இந்த விவரத்தை முதல்விசாரணையில் சொல்லாமல் தற்போது கற்பனையாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்து மொத்தம் எத்தனை சதுர அடி என்று எனக்குத் தெரியாது. மெத்தை வீட்டை யாரை வைத்துக் கட்டினார்கள், அதன் மதிப்பீடு எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. வழக்குச் சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்று நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

02-ஆம், 03-ஆம் பிரதிவாதிகளை எனக்குத் தெரியாது. அவர்கள் சாந்தியிடம் விற்பனைக்கான ஒப்பந்தம் செய்திருந்தார்கள் என்ற விவரமும் அந்த ஒப்பந்ததின்பேரில் அவர்கள் வழக்கிட்டு நீதிமன்றம்மூலம் விற்பனை

பத்திரம் எழுதி வாங்கியுள்ள விவரமும் அந்த வழக்கு உச்ச நீதிமன்றம் வரை சென்றது என்ற விவரமும் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

வாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவர்களுக்கு உதவி செய்ய நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.